எல்லா நாட்களிலும் சத்துணவுக் கூடத்திற்கு சரியாக வருகிறார்கள். இங்கே முட்டை, கறி வழங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். முட்டையிலும், கறியிலும் இருக்கிற சத்தை விட அதிகமான சத்து காய்கறியில் இருக்கிறது என்பதை உணர்ந்துதான் காய்கறி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக வங்கி உதவியுடன் சத்துணவுத் திட்டம்.

167—(*வினா எண் 14025) திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 400 கோடி ரூபாய் திட்டத்தில் உலக வங்கி உதவியுடன் சத்துணவுத் திட்டம் எப்போது செயல்படும்?

(ஆ) விரிவாக்கத்தினால் ஏற்படும் பலன்கள் யாவை?

(இ) இந்தத் திட்டத்தினால் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தையும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தையும் இணைத்து இம் மாநிலத்தில் "ஒருங்கிணைந்த குழந்தைகள் நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்" என்ற பெயரில் செயல்படுத்த கருத்துரு பரிசிலனையில் உள்ளது. அக்கருத்துரு இறுதியாக்கப்பட்டபின் உலக வங்கிக்கு அனுப்பி ஒப்புதல் பெற்றபின் செயல்படத் துவங்கும்.

(ஆ) தற்போது பயன்பெறும் 2 முதல் 4 வயது வரையான குழந்தைகளோடு இத்திட்டத்தினால் 6 மாதம் முதல் 24 மாதம் வரையிலான குழந்தைகளுக்கும் மற்றும் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சிறப்பு இணை உணவும் மற்றும் எல்லா சுகாதார சேவைகளும் அளிக்கப்படும்.

(இ) இத்திட்டத்தினால் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.